நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.50/2022
அரசு தரப்புக்காக அ. சா. 8 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.க.சண்முகம் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : LW.8 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2026.

(Through Video conferencing remote point at Tanjore District Court, Court System)

*(இந்த சாட்சி விசாரணை காணொலி மூலம் பதிவு செய்யப்படுகிறது. காணொலியின் ஒரு முனையில் நீதிபதியும், நீதிமன்ற ஊழியர்களும், எதிரி தரப்பு வழக்கறிஞர்* திரு.நாராயணன் மற்றும் திரு.திருநாவுக்கரசு *அவர்களும் அரசு தரப்பு வழக்கறிஞர் திருமதி.வளர்மதி அவர்களும் இருக்கிறார்கள். காணொலியின் மற்றொரு முனையான தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள கணினி அறையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ள சாட்சியான டாக்டர் திரு.க.சண்முகம் அவர்கள் உள்ளார். இருத்தரப்பினர் சம்மதத்தின்பேரில் இந்த சாட்சியின் விசாரணை காணொலி மூலம் பதிவு செய்யப்படுகிறது.)*

**<u>முதல் விசாரணை</u>–** (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 02.40 )

நான் தற்போது தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ பிரிவில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.09.2021 விழுப்புரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் முதுநிலை உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது பண்ருட்டி காவல்நிலைய குற்ற எண்.959/2021 என்ற வழக்கில் இறந்துபோன 38 வயது மதிக்கத்தக்க தமிழ் என்கிற செங்கேணி , க/பெ.சரவணன் என்பவர் பிரேதத்தை இறப்பின் காரணம் அறியும்பொருட்டு பண்ருட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளரிடம் இருந்து வேண்டுகோள் கடிதம் அன்றைய தினம் பெறப்பட்டது. அன்றைய தினமே பண்ருட்டி காவல்நிலைய முதல்நிலைக்காவலர் திருமதி.வேண்டா வைரம் என்பவர் பிரேதத்தை அடையாளம் காட்ட பிரேத பரிசோதனை மாலை 04.10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. பிரேத பரிசோதனையின்போது உடல் முழுவதும் பிண விரைப்புத்தன்மை காணப்பட்டது.

**<u>வெளிப்புற பரிசோதனை</u>**

மிதமான போஷாக்குடன் முகம் வெளிரியும் இரு கண்கள் மூடியும் கண்ணின் விழித்திரை வெண்மையாகவும் கருவிழி மழுங்கலாகவும் காணப்பட்டது. வாய் மூடி இருந்தது. நாக்கு அதன் உள்ளே இருந்தது. அனைத்து நகங்களும் வெளிர்ந்து காணப்பட்டன. இயற்கை துவாரங்கள் காலியாக காணப்பட்டன.

**<u>உட்புற பரிசோதனை</u>**

முடிபோர்த்திய தோல், மேற்பகுதி மண்டைஓடு, அடிப்பகுதி மண்டை ஓடு, மூளை உறை இயல்பாக காணப்பட்டது. மூளை குறுக்கு வெட்டுத் தோற்றத்தில் சிவந்து வீங்கி காணப்பட்டது. கழுத்து பகுதி எந்தவித ரத்தக்கசிவும் இல்லை. நாவடி எலும்பு, குரல்வளை எலும்பு இயல்பாக காணப்பட்டது.

நெஞ்சு எலும்பு இயல்பாகவும் வலது நுரையீரல் 440 கிராம் எடையுடன் சிவந்து வீங்கியும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் நுரை கலந்த வெளியேறி காணப்பட்டது. இடது நுரையீரல் 391 கிராம் எடையுடன் சிவந்து வீங்கியும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் நுரை கலந்த வெளியேறி காணப்பட்டது. இதயம் 391 கிராம் எடையுடன் இயல்பான அளவில் காணப்பட்டது. வலது அறையில் உறைந்த ரத்தம் காணப்பட்டது. இதயத்தின் ரத்த நாளங்கள் இயல்பாக காணப்பட்டது.

இரைப்பை காலியாகவும் அதன் உட்புற படிவங்கள் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், இரு சிறுநீரகம் இயல்பாகவும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் சிவந்தும் காணப்பட்டது. சிறுநீர்பை காலியாக காணப்பட்டது. கர்பப்பை இயல்பாக காணப்பட்டது. இடுப்பு எலும்பு, முதுகு தண்டு இயல்பாக காணப்பட்டது.

பிரேத பரிசோதனை மாலை 05.10 மணிக்கு முடிக்கப்பட்டது. உடல் உள்ளுறுப்புகள் சேகரம் செய்து பகுப்பாய்விற்காக தடய அறிவியல் ஆய்வகதத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு முன்பாக 12–ல் இருந்து 24 மணி நேரத்திற்குள் இறந்திருக்க கூடும் என்றும் பகுப்பாய்வு அறிக்கை வரும்வரை இறுதி கருத்துரை நிறுத்திவைக்கப்பட்டு பிரேத பரிசோதனை சான்று வழங்கப்பட்டது. தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட அறிக்கையில் VPM/TOX.H/1791/2021, dated 07.12.2021 அதில் உடல் உள் உறுப்புகளில் போரேட் என்ற விஷம் இருந்ததாக குறிப்பிடப்பட்டு இருந்தது. அதனடிப்படையில் இறந்த நபர் போரேட் விஷம் உட்கொண்டதன் விளைவாக இறந்துள்ளார் என இறுதி கருத்துரை வழங்கினேன். (நான் வழங்கி பிரேத பரிசோதனை அறிக்கை 2 பக்கங்கள் கொண்டது **அ.த.சா.ஆ.5** ஆகவும் உள் உறுப்பு பரிசோதனை முடிவு 2 பக்கங்கள் கொண்டது **அ.த.சா.ஆ.6** ஆகவும் இறுதி கருத்துரை **அ.த.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> –

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

<u>**மறு விசாரணை**</u> – இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 02.57 )

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.

***காணொலி மூலம் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சர் மூலம் தட்டச்சு செய்து அதனை சரிப்பார்த்து பிழைகளை சரிசெய்து மீண்டும் சாட்சியிடம் வாசித்து காண்பித்து சாட்சி சரியாக உள்ளதாக ஒப்புக்கொண்டார். அதனை உறுதிப்படுத்திய பின்னர் அது குறித்து நகல் இ–மெயில் மூலம் சாட்சிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், அதில் சாட்சி கையெழுத்திட்டு அதனை ஸ்கேன் செய்து நீதிமன்றத்திற்கு இ–மெயில் மூலம் இன்றைய தினமே திரும்ப அனுப்பி வைக்க வேண்டும் என்றும், சாட்சியத்தின் மற்றொரு நகலை எடுத்து அதில் 4(viii) Madras High Court Video Conference Rule, 2018ன் படி Coordinator ஆக நீதிமன்றத்தில் நியமிக்கப்பட்ட திரு.C.மணிகண்டன், Assistant Programmer, முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர் அவர்கள் முன்னிலையில் சாட்சி கையெழுத்திட்டு மேற்படி Assistant Programmer சான்றொப்பம் செய்து உடனே இந்நீதிமன்றத்திற்கு e–mail மூலமாக அனுப்பி வைக்க வேண்டும் என்றும் பதிவிறக்கம் செய்யப்பட்ட அசலில் கையொப்பம் பெற்று தபால் மூலம் அதனையும்***

*இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

சாட்சியின் கையொப்பம்

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.

**The witness devised at remote point I was present, the deposition was read over to the witness, admitted to be correct and signed before me. Coordinator at Remote Point:-**

**Signature**
**Thiru.C.Manikandan,**
**Assistant Programmer,**
**Principal District Court,**
**Tanjore.**